கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (யூன் 2019)

# FAS 4113 Post-Colonial Art in Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி–II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் என மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01. பின்வரும் விடயங்கள் குறித்த உமது மனப்பதிவுகளை முன்வைக்குக.

(அ) பாரம்பரியப் பண்பாடுகள் (07 புள்ளிகள்)

(ஆ) பின்காலனித்துவம் (07 புள்ளிகள்)

02. "காலனித்துவம் அறிமுகப்படுத்திய நவீன கலை வடிவங்கள் சில பின்காலனியச் சூழலில் ஆற்றுகைக் கலைகளின் தன்மைகளைப் பெற்றுள்ளன"

(அ) பாரம்பரிய வாழ்வியலில் ஆற்றுகைக் கலைகளின் வகிபாகம் எவ்வாறு இருந்துள்ளது?

(06 புள்ளிகள்)

(ஆ) நவீன கலை வடிவங்களின் பண்புகளைச் சுட்டிக் காட்டி, இலங்கையின் நவீன தமிழ் இலக்கியங்கள் ஆற்றுகை வடிவம் பெற்ற நிலைமைகள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

03. "பாரம்பரியக் கலைகளின் அழகியல் தொடர்பாக, பின்காலனித்துவ அணுகுமுறைகள், நவீன அணுகுமுறைகளிலிருந்து வேறுபட்டிருந்தன" பின்வரும் விடயங்கள் தொடர்பில் கருத்துக் கூறுக.

(அ) ஆற்றுகை வெளிகள் (04 புள்ளிகள்)

(ஆ) ஆற்றுகை முறைகளும் அவற்றின் உருவாக்கமும் (05 புள்ளிகள்)

(இ) பார்வையாளர்கள் (05 புள்ளிகள்)

## பகுதி – II

04. "பின்காலனியச் சூழலில் எழுச்சி பெற்ற அடையாள அரசியல் வெளிப்பாடுகளாக, பேராசிரியர்களான எதிரிவீர சரத்சந்திர சு.வித்தியானந்தன் ஆகியோருடைய தேசிய நாடக வடிவம் பற்றி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" இது குறித்து விமர்சிக்குக.
(24 புள்ளிகள்

05. "கலைச் செயற்பாடுகள் ஊடாக கலைக்கோட்பாடுகள் உருவாக்கப்படுத பின்காலனியச் சூழலில் அவதானிக்கப்படும் முக்கிய விடயமாக உள்ளத இலங்கையின் தமிழ்ச் சூழலில் இவ்விதம் வளர்ச்சியடைந்துள் கலைக்கோட்பாடு ஒன்றினை எடுத்துக் காட்டி விளக்குக.
(24 புள்ளிகள்

06. "காலனித்துவ எண்ணக்கருக்களின் செல்வாக்குடன் உருவாக்கப்பட் கலை வடிவங்கள் நுகர்வுப் பண்பாட்டிற்கு வலுச்சேர்ப்பதாக அமைகின்றன இலங்கையில் உருவான நவீன ஓவியங்களுடன் தொடர்புபடுத் இக்கூற்றினை ஆராய்க.
(24 புள்ளிகள்

07. "இலங்கைத் தமிழ்ச் சூழலில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்க பின்காலனித்துவ கலையாக்கச் செயற்பாடுகளை முன்மொழிந்த ஓ கலை, இலக்கிய புலமையாளராகத் தெரிகின்றார்" இக்கூற்றி பொருத்தப்பாட்டினை உதாரணங்கள் காட்டி விளக்குக.
(24 புள்ளிகள்

*****